# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 16 புதன் 30.06.2021 மலர் - 2, இதழ் - 85


## தமிழக அரசுக்கு குட்டு

தமிழகத்தில் நீட் தேர்வு ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறதா என்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க, உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில், ஒன்பது பேர் அடங்கிய ஒரு குழுவை நியமித்தது தமிழக அரசு. இந்த அரசாணைக்குத் தடை விதிக்கவும், ரத்து செய்யவும் கோரி தமிழக பா.ஜ.க பொதுச் செயலாளர் கரு. நாகராஜன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அதனை விசாரித்த நீதிபதிகள், உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு முரணான நிலைப்பாட்டை தமிழக அரசு எடுக்க முடியாது. குழு அமைப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டதா எனவும் கேள்வி எழுப்பினர். மேலும், வழக்கு குறித்து மத்திய அரசும், தமிழக அரசும் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஜூலை 5ம் தேதிக்குத் தள்ளிவைத்தனர்.

விஜயபாரதம்





## கோயில்கள் இ.பி.எஸ். கோரிக்கை

விஜயபாரதம்

முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க இணை ஒருங்கிணைப் பாளருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், 'ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கோயில் சொத்துகளை மீட்போம், கோயில் பணியாளர்களைப் பாதுகாப்போம் என்று வாயால் சொல்லும் ஆட்சியாளர்கள், ஆக்கிரமிப்பில் உள்ள இடங்களை ஆக்கிரமிப்பாளர்களுக்கே கொடுக்க உள்ளதாகச் செய்திகள் வருகின்றன. இதனால், திருக்கோயில்களுக்குத் தொடர்ந்து இழப்பு ஏற்படும். எனவே தமிழக அரசு, குறைந்த சம்பளத்தில் நீண்ட காலமாக தினக் கூலி மற்றும் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். திருக்கோயில்களுக்கு வாடகை பாக்கி நிலுவை வைக்காதவர்கள் தொடர்ந்து அச்சொத்துகளில் வாடகைக்கு அனுமதிக்க வேண்டும். இதர ஆக்கிரமிப்பாளர்களைக் கண்டறிந்து, அச்சொத்துகளை அறநிலையத்துறை விதிகளின்படி ஏலம் விட்டு திருக்கோயில்களுக்கு வருமானத்தை அதிகரிக்க வேண்டும்' என்று தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கோயில் நிலம் மீட்பு


விஜயபாரதம்

குரோம்பேட்டை நெமிலிச்சேரியில் உள்ள ஆனந்தவல்லி சமேத அகத்தீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான ரூ. 15 கோடி மதிப்புள்ள 2.14 ஏக்கர் நிலத்தை பல ஆண்டுகளாக 11 பேர் ஆக்கிரமித்திருந்தனர். ஹிந்து அறநிலையத் துறையினர் மீட்டனர். இதனால், பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

---

# கோயில் நிலத்தை ஒப்படையுங்கள்


விஜயபாரதம்

பழனி பாலதண்டாயுதபாணி கோயிலுக்கு இங்கிலாந்து மகாராணியால் தானமாக வழங்கப்பட்ட 60 ஏக்கர் நிலம், தாராபுரம் தாலுகா பெரிய குமாரபாளையத்தில் உள்ளது. இந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்திருந்த ஸ்ரீரங்க கவுண்டர், ராமசாமி கவுண்டர் இருவரும் நிலத்திற்கு உரிமை கோரினர். இது தொடர்பான வழக்கை விசாரித்த ஈரோடு நீதிமன்றம், ஆங்கில அரசால் வழங்கப்பட்ட நிலம் கோயில் மூலவருக்கே சொந்தம் என்று தீர்ப்பளித்தது. சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றமும் இந்த தீர்ப்பை உறுதி செய்தன. அதன் பின்னர், நிலத்தின் மீதான உரிமையை ஒப்படைக்கும்படி கோவில் நிர்வாகம் தொடர்ந்த வழக்கிலும் குத்தகைதாரர்களுக்கு எதிராகவே தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் குத்தகைதாரர்கள் மேல்முறையீடு செய்திருந்தனர். அதனை விசாரித்த நீதிமன்றம், நிலத்தை கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கும்படி குத்தகைதாரர்களுக்கு உத்தரவிட்டு, அவர்களின் வழக்கை தள்ளுபடி செய்தது. மேலும், 'பொதுவாக குழந்தைகளுக்கு நீதிமன்றமே பாதுகாப்பு என்ற சட்டம் உள்ளது. திருக்கோயில்களில் உள்ள தெய்வங்களும் மைனர்களாகவே கருதப்படுகிறார்கள். பழனி தண்டாயுதபாணியை பக்தர்கள் குழந்தையாக பார்ப்பதால்தான் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்கிறார்கள். அதன் அடிப்படையில் கோயில் கர்ப்பகிரகத்தில் உள்ள சாமி, சிலைகள், கோயில் சொத்துக்களுக்கு நீதிமன்றமே பாதுகாப்பு' என்று நீதிபதி தெரிவித்தார்.

---


# பயங்கரவாதிகளின் கூடாரமாகும் கேரளா

கேரள பல்கலைக்கழகங்களில், பல்வேறு படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி துறைகளில் சேர, வெளி நாடுகளில் இருந்து 1,042 விண்ணப்பங்கள் வந்துள்ளன. பெரும்பாலான விண்ணப்பங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் கோட்டையான சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தானிலிருந்து வந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ், தாலிபான் உட்பட சில சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. புலனாய்வு அமைப்புகள் இதனை விசாரித்து வருகின்றன. இவர்கள் பின்பற்றும் இந்த முறை, ஜாகிர் நாயக் கூறிய 'ஹிஜ்ரா' கோட்பாட்டை ஒத்திருக்கிறது. முன்னதாக, கேரளாவின் மக்கள்தொகையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, முஸ்லிம்கள் அங்கு பெருமளவில் குடியேறுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.


விஜயபாரதம்

# மூடப்படுகிறதா காந்திமதி மேல்நிலைப்பள்ளி

ஹிந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், நெல்லையப்பர் கோயில் நிர்வாகம் நடத்திவரும் பாளையங்கோட்டை, காந்திமதி மேல்நிலைப்பள்ளி, கடந்த பல ஆண்டுகளாக சிறப்பாக இயங்கி வருகிறது. ஆதரவற்ற மாணவ மாணவியர்கள் இங்கு உள்ள ஆதரவற்றோர் கருணை இல்லத்தில் தங்கி படித்து வருகின்றனர். ஆனால், தற்போது இப்பள்ளியில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான தொடக்கக் கல்வியில் மாணவர் சேர்க்கை கடந்த ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் மாணவர் சேர்க்கையை நிர்வாகம் நிறுத்தி வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆதரவற்றோர் இல்லத்திலும் மாணவ மாணவியர் சேர்க்கை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக சிறப்பாக இயங்கி வரும் பள்ளியை நிர்வகிக்க இயலாமல் மூடுவதற்கு அறநிலையத்துறை முயன்று வருவது மிகுந்த கண்டனத்துக்குரியது என பொதுமக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும், ஹிந்து சமய அறநிலையத் துறையின் கீழ் பல புதிய பள்ளிகளை உருவாக்குவோம் என கூறிய அறநிலையத்துறை அமைச்சர், இதனை மீண்டும் திறந்து நடத்த ஆவன செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் பெற்றோர்கள் அரசுக்கு வைத்துள்ளனர்.



விஜயபாரதம்



விஜயபாரதம்

# ராணுவத்தில் போடோ இளைஞர்கள்

போடோலாந்து பிராந்திய கவுன்சிலின் தலைவர் திரு. பிரமோத் போரோ, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம் அளித்துள்ள மனுவில் போடோ இளைஞர்கள் முப்படைகள் மற்றும் துணை ராணுவ படைகளில் இணைவதை ஊக்குவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். 10,000 போடோ இளைஞர்கள் நாட்டின் முப்படைகள் மற்றும் துணை ராணுவ படைகளில் இணையும் வகையில் போடோலாந்து பிராந்திய கவுன்சில் பயிற்சி மையங்களை அமைத்து பயிற்சி அளிக்க வேண்டும் என கேட்டு கொண்டுள்ளார். மேலும், இக்கருத்தை ஏற்கனவே அசாம் காவல்துறையிடம் எழுப்பி உள்ளதாகவும், பாராளுமன்றத்தில் சிறப்பு சட்டம் மூலமாக போடோலாந்து பிராந்திய கவுன்சிலுக்கு மேலும் சில அதிகாரங்களை வழங்க வழிவகை செய்யுமாறும் உள்துறை அமைச்சரை அவர் கேட்டு கொண்டுள்ளார்.




விஜயபாரதம்

# மதமாற்ற கும்பல் கைது

உத்திரபிரதேசத்தில், பாமர மக்கள், ஏழைகள், ஊனமுற்றோர் என ஆயிரக் கணக்கானோரை ஆசை காட்டியும், மூளை சலவை செய்தும் முஸ்லிம்கள் மதமாற்றம் செய்தது சமீபத்தில் தெரியவந்தது. இந்த சதியின் பின்னணியில் சில அந்நிய நாடுகள் ஏராளமான நிதி உதவி அளித்த செய்தியும் வெளியாகின. இது சம்பந்தமாக, பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். நேற்று இது சம்பந்தமாக, இர்பான், மன்னு யாதவ் எனும் அப்துல் மன்னான் மற்றும் ராகுல் போலா என்ற மூன்று முக்கிய நபர்களை உத்தர பிரதேச பயங்கரவாத தடுப்பு காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

# அதிகரிக்கும் தடுப்பூசி மா:பியா



விஜயபாரதம்

மேற்கு வங்கத்தைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், போலி தடுப்பூசி போடுவது, மற்றவர்களின் ஆதார் எண், தொலைபேசி எண்ணை வைத்து வேறு சிலருக்கு தடுப்பூசி போடுவது போன்ற செயல்கள் அதிகரித்து வருகின்றன. தடுப்பூசி போட்டுக்கொண்டால் குறுஞ்செய்தி வருவதில்லை, தடுப்பூசி செலுத்திக் கொள்ளாமலேயே குறுஞ்செய்தி வருவது போன்ற நிகழ்வுகள் சமீப காலமாக அதிகரித்து வருகின்றன. உதாரணமாக, மத்திய பிரதேசம் போபாலின் திலா ஜமல்புரா, வேதாந்த் என்ற 13 வயது சிறுவனுக்கு தடுப்பூசி போடப்பட்டதாக குறுஞ்செய்தி வந்துள்ளது. அதேபோல், சாட்னாவை சேர்ந்த சைனேந்திர பாண்டே என்பவரின் அலைபேசிக்கு, அவருக்கு யார் என்றே தெரியாத 3 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டதாக செய்தி அனுப்பப்பட்டுள்ளது. இது போன்ற சம்பவங்கள், அண்டை நாடுகளில் இருந்து இந்தியாவில் குடியேறிய ரோஹிங்கியாக்கள், வங்க தேசத்தவர்கள் போன்றோருக்கு தடுப்பூசி செலுத்தும் முயற்சியா, கள்ளத்தனமாக தடுப்பூசிகள் அதிக பணத்திற்கு விற்கப்படுகிறதா, இதில், அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், மருத்துவத்துறை பணியாளர்களுக்கு தொடர்பு உள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை மத்திய மாநில அரசுகள் உடனடியாக விசாரிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

---

# மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

நாடு முழுவதும் ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டத்தை மத்திய அரசு கடந்த ஆண்டு அமல்படுத்தியது. இந்தத் திட்டத்தின் மூலம் வெளி மாநிலத் தொழிலாளர்கள், தங்களுக்குரிய ரேஷன் பொருட்களை நாட்டில் உள்ள எந்த ரேஷன் கடையில் இருந்தும் வாங்க முடியும். தங்களின் சொந்த மாநிலங்களில் என்ன பெறமுடியுமோ, அவற்றை வெளிமாநில ரேஷன் கடைகளில் இருந்தும் பெற முடியும்.

இதனை தமிழக அரசு உள்பட பல்வேறு மாநிலங்கள் ஏற்று, அமல்படுத்தியுள்ளன. ஆனால், ஒருசில மாநிலங்கள் அதனை ஏற்க மறுத்து விட்டன. இது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நேற்று விசாரணையின்போது, ஒரே நாடு, ஒரே ரேஷன் திட்டத்தை ஜூலை 31ஆம் தேதிக்குள் அமல்படுத்த வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், தேசிய தகவல் மையத்துடன் இணைந்து, புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத மக்கள் குறித்த கணக்கெடுப்பு செய்து வலைதளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.



விஜயபாரதம்

# காலநிலை ஆர்வலரின் மோசடி



விஜயபாரதம்

இந்தியாவின் கிரெட்டா துன்பர்க் என அறியப்படும் மணிப்பூரை சேர்ந்த லிசிபிரியா கங்குஜாம், ஏழை நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் வழங்குவதாகக் கூறி உலகெங்கும் நன்கொடை திரட்டினார். அவரின் அமைப்பு இதுவரை சுமார் 75 லட்சம் திரட்டியுள்ளது. ஆனால், லிசிபிரியாவை முன் நிறுத்தி, பின்னால் இருந்து இயக்கும் அவரது தந்தையும், நோபல் சிட்டிசன் பவுண்டேஷன் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனமும் அதில் முறைகேடுகள் செய்துள்ளன. இலவசமாக வழங்கப்பட்ட ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை அவரது தந்தை டாக்டர் கே.கே. சிங் விலைக்கு விற்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர், முன்பு ரூ. 19 லட்சம் பண மோசடி செய்தவர், காலநிலை பாதுகாப்பு மாநாடு என்ற பெயரில் வெளிநாடுகளில் வசிப்போரை ஏமாற்றி லட்சக்கணக்கில் வசூல் செய்தவர், ஐ.நா, யுனெஸ்கோ, இந்திய அரசு ஒரு பரிமாற்ற திட்டத்தை நடத்துவதாகக் கூறி மக்களை ஏமாற்றிவர் என்பது போன்ற பல்வேறு முறைகேடுகள் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளன. காவல்துறை இது குறித்து விசாரித்து வருகிறது.

# சீக்கிய பெண்கள் மீதான லவ் ஜிஹாத்

ஜம்மு காஷ்மீரில் சீக்கிய பெண்கள் சிலர் அங்குள்ள முஸ்லிம்கள், காதல் திருமணம், கடத்தல் என கட்டாய மதமாற்றம் செய்வது சில நாட்களுக்கு முன் வெளிச்சத்திற்கு வந்தது. இதில், அம்மாநில துணை நிலை ஆளுனர் இந்த விஷயத்தில் தலையிட வேண்டும். குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிரோமணி அகாலிதளத் தலைவர் மஞ்சீந்தர் சிங் சிர்சா மற்றும் ஷிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டி (எஸ்.ஜி.பி.சி) அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில், மௌலானா ஆசாத் பல்கலைக்கழகத்தின் முன்னாள் அதிபர் ஜாபர் சரேஷ்வாலா, சீக்கிய சிறுமிகள் கட்டாய மதமாற்றம் செய்யப்படவில்லை என உண்மையை மறைத்து பேசியுள்ளார். இதற்கு சீக்கிய அமைப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

விஜயபாரதம்



# தடுப்பூசி மோசடியின் தலைநகர்

மேற்கு வங்கத்தில், கடந்த ஜூன் 23ல் ஜாதவ்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் மிமி சக்ரவர்த்தி கொல்கத்தா மாநகராட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட ஒரு தடுப்பூசி முகாமில் கோவிஷீல்ட் தடுப்பூசி செலுத்திக்கொண்டார். ஆனால், அவருக்கு செலுத்திக் கொண்டதற்கான குறுஞ்செய்தி கிடைக்கவில்லை அவருடன் தடுப்பூசி செலுத்திக்கொண்ட 250 பேருக்கும் குறுஞ்செய்தி வரவில்லை. மிமி, காவல்துறையில் புகார் அளித்தார். விசாரணையில், ஐ.ஏ.எஸ் அதிகாரியாக நடித்து போலி தடுப்பூசி முகாமை நடத்திய டெபஞ்சன் தேவ் என்பவர் கைது செய்யப்பட்டார். ஹவுராவில் உள்ள மங்கூர் பகுதியை சேர்ந்த குட்டியா என்பவர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாமலேயே அவருக்கு செலுத்திக் கொண்டதாக குறுஞ்செய்தி வந்தது. தன் பெயரில் அந்த தடுப்பூசி விற்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கிறார் அவர். பாலிகுங் கோல்ட் செயின் டிப்போவில் சுமார் 60 ஆயிரம் தடுப்பூசிகள் களவு போயின. ஒரு வாரம் கழித்து, பவானிபூரின் சேட்லா பகுதியில் உள்ள ஒரு மருத்துவமனையில் அவை கண்டுபிடிக்கப்பட்டன. இவை வெளியில் தெரிந்த பனிப்பாறையின் சிறு பகுதிதான். இதில் மத்திய மாநில அரசுகள் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்காவிட்டால், தடுப்பூசியின் கள்ளச் சந்தை தலைநகரமாக மேற்கு வங்கம் மாறிவிடும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.




விஜயபாரதம்

# டுவிட்டரின் சண்டித்தனம்




விஜயபாரதம்

டுவிட்டரின் இணையதளத்தில் வேலைவாய்ப்புகள் தொடர்பான பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஜம்மு காஷ்மீரும், லடாக்கும் நீக்கப்பட்டிருந்தன. அதற்குப் பதிலாக இப்பகுதிகள் சேர்ந்து தனி நாடாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியது. கடும் கண்டனங்கள் எழுந்ததால், தவறான வரைபடத்தை டுவிட்டர் நிறுவனம் நீக்கியது. அனால், மன்னிப்பு ஏதும் கேட்கவில்லை. இந்தியாவின் வரைபடத்தை டுவிட்டர் நிறுவனம் தவறாக வெளியிடுவது இது முதல் முறையல்ல. இந்நிலையில், இந்திய வரைபடத்தை தவறாகக் காட்டியதாக டுவிட்டர் இந்தியா நிறுவன இயக்குனர் மனீஷ் மகேஸ்வரி மீது உத்தர பிரதேச மாநிலம் புலந்த்சாஹர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு பிரச்சனைகளுக்குப் பிறகு, சமூக வலைதளங்கள் உள்ளிட்ட டிஜிட்டல் ஊடகங்களை ஒழுங்குபடுத்தும் புதிய தொழில்நுட்ப சட்டத்தின்படி, தர்மேந்திர சதுர் என்பவரை, தற்காலிக குறைதீர் அதிகாரியாக டுவிட்டர் நியமித்திருந்தது. இதனை மத்திய அரசு ஏற்கவில்லை. இதனையடுத்து அவர் ராஜினாமா செய்தார். தற்போது இந்திய குறை தீர் அதிகாரி இந்தியராக இருக்க வேண்டும் என்ர நிபந்தனையை மீறி, ஜெர்மி கெசல் என்பவரை, இந்தியாவுக்கான குறைதீர் அதிகாரியாக நியமிப்பதாக டுவிட்டர் அறிவித்துள்ளது.

# டுவிட்டரைத் தொடர்ந்து கூகுள்




இந்தியாவின் வரைபடத்தை சிதைத்துக் காட்டிய டுவிட்டர் பின்னர் அதனை நீக்கிவிட்டது. அதனைத் தொடர்ந்து நேற்று, தேடுபொறியான கூகுளும் இந்தியாவின் சிதைந்த வரைபடத்தை வெளியிட்டு மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. https://trends.google.com/trends/explore?q=India&geo=IN என்ற கூகிள் ட்ரெண்ட்ஸ் இணையதளத்தில் ஒரு பிரிவில், ஜம்முகாஷ்மீர், லடாக் மற்றும் அருணாச்சல பிரதேச மாநிலங்களின் யூனியன் பிரதேசங்களையும் கூகிள் சர்ச்சைக்குரிய பகுதிகளாக காண்பித்துள்ளது. இந்திய வரைபடத்தின் சிதைந்த பதிப்பை வெளியிடுவதற்காக கூகுள் விமர்சனத்திற்கு ஆளானது இது முதல் முறை அல்ல. பிப்ரவரி 2020ல், கூகுளின் வழிகாட்டும் வரைபடங்கள் காஷ்மீரின் எல்லைகளை புள்ளிகளுடன் சர்ச்சைக்குரிய பகுதிகளாக தெரியும் வண்ணம் வெளியிட்டது. 2013ம் ஆண்டிலும், கூகுள் வரைபடம், போக் மற்றும் அக்சாய் சின், அருணாசனல் பிரதேசத்தின் சில பகுதிகளை இந்திய எல்லைக்கு வெளியே இருப்பதாக காட்டியதற்காக விமர்சனத்திற்கு உள்ளானது.

விஜயபாரதம்

# எல்லை தாண்டி கல்யாணம் செய்தவர் கைது

மேற்கு வங்கம், நாடியா மாவட்டம் பல்லவ்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜெய்காந்தோ சந்திர ராய். இவருக்கு முகநூல் வாயிலாக நமது அண்டை நாடான வங்கதேசத்தின் நெரெயில் பகுதியைச் சேர்ந்த ஒரு இளம்பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டது. இவர்கள், திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர். இதற்காக கடந்த மார்ச்சில் ஜெய்காந்தோ சட்டவிரோதமாக எல்லை தாண்டி வங்கதேசம் சென்றார். அங்கு திருமணம் செய்து கொண்ட அவர்கள் இருவரும் மதுப்பூர் எல்லை வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தனர். அப்போது, ரோந்து பணியில் இருந்த எல்லை பாதுகாப்பு படையினர் அவர்களை கைது செய்து காவல் நிலையத்தில் மேல் விசாரணைக்கு ஒப்படைத்தனர்.

விஜயபாரதம்



# டாடாவின் எலெக்ட்ரிக் கார்கள் திட்டம்

அடுத்த நான்கு ஆண்டுகளில் 10 எலெக்ட்ரிக் வாகனங்களை தயாரிக்க டாடா மோட்டார்ஸ் திட்டமிட்டிருப்பதாக அந்நிறுவனத்தின் 76வது ஆண்டு அறிக்கையில், அதன் தலைவர் என்.சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார். 'இந்தியாவில் எலெக்ட்ரிக் வாகனச் சந்தை சீராக உயர்ந்து வருகிறது. தற்போது மொத்த வாகன விற்பனையில் 2 சதவீதம் அளவுக்கு எலெக்ட்ரிக் வாகனங்களின் பங்கு உள்ளது. வரும் காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் உயரும். அதனால் அதற்கு ஏற்ப, வரும் 2025ம் ஆண்டுக்குள் 10 புதிய எலெட்ரிக் வாகனங்களை அறிமுகம் செய்ய இருக்கிறோம். சார்ஜ் ஏற்றும் மையங்களை நாடு முழுவதும் அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறோம். இந்தியா மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் பேட்டரி உற்பத்தியில் டாடாவுடன் இணைந்து பணியாற்றும் நிறுவனங்களை நாங்கள் பரிசீலனை செய்து வருகிறோம்' என தெரிவித்தார். டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வசம் தற்போது நெக்ஸான் இவி மற்றும் டிகார் இவி என்ற இரு எலெட்ரிக் வாகனங்கள் உள்ளன. நெக்ஸான் இவி கடந்த ஆண்டு ஜனவரில் அறிமுகம் செய்யப்பட்டு இதுவரை 4,000க்கும் மேற்பட்ட வாகனங்கள் விற்பனையாகி இருக்கிறது. அட்ராஸ் மாடலில் எலெக்ட்ரிக் கார் அடுத்த சில மாதங்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




விஜயபாரதம்


# உலகமே விரும்பும் கோ-வின் செயலி

சி.ஐ.ஐ., எனப்படும் இந்திய தொழில்துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த, பொது சுகாதாரத்திற்கான இரண்டாவது மாநாட்டில் பேசிய கொரோனா தடுப்பூசி திட்டத்தின் உயர்மட்ட குழுவின் தலைவர் டாக்டர் ஆர்.எஸ்.சர்மா, 'கொரோனா தடுப்பூசி முன்பதிவுக்கு பயன்படுத்தப்படும், 'கோ வின்' செயலியை போன்ற தொழில்நுட்பத்தை, தங்கள் நாட்டிலும் நடைமுறைபடுத்த ஐக்கிய அரபு அமீரகம், கனடா, மெக்சிகோ, உக்ரைன் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட நாடுகள் ஆர்வமாக உள்ளன. அவர்களுக்கு இந்த மென்பொருளை இலவசமாக அளித்திட, மத்திய அரசு தயாராக உள்ளது. 'கோ வின்' செயலி உருவாக்கப்பட்ட ஐந்து மாதங்களிலேயே, 30 கோடிக்கும் அதிகமான பயனாளர்கள் தடுப்பூசிக்காக அதில் பதிவு செய்து பயன் அடைந்துள்ளனர். இதில் தடுப்பூசிக்கான முன்பதிவு, தேதியில் மாற்றம் மற்றும் முன்பதிவை ரத்து செய்யும் நடைமுறையை மிக எளிதாக மேற்கொள்ளலாம். குடிமக்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட இந்த தொழில்நுட்பத்தின் வாயிலாக, மாவட்ட அளவில் துல்லியமான, உண்மையான தகவல்களை பெற முடியும்' என தெரிவித்தார்.




விஜயபாரதம்

# பாரத தேசியவாதத்தின் முதுபெரும் மனிதர்



விஜயபாரதம்

பம்பாயில் 1825ல் பிறந்தார் தாதாபாய் நௌரோஜி. பம்பாய் எல்பின்ஸ்டன் கல்வி நிலையத்தில் பயின்றார். எல்பின்ஸ்டன் கல்லூரியில் கணிதம், இயற்கைத் தத்துவ உதவிப் பேராசிரியராகப் பணியாற்றினார். லண்டன் பல்கலைக் கழகத்தில் குஜராத்தி மொழிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். ஆங்கில ஆட்சியில் இந்தியர்கள் படும் துன்பம் குறித்து தன் பேச்சுகள், கட்டுரைகள் மூலமாக இங்கிலாந்து மக்களுக்கு விளக்கினார்.

1852ல் அரசியல் பயணத்தைத் தொடங்கியவர், ஆங்கிலேயர் ஆட்சியை தீவிரமாக எதிர்த்தார். மக்களுக்கு கல்வியறிவு வழங்கவும் விடுதலை வேட்கையை எழுப்பவும் ஞான் பிரச்சார் மண்டல், அறிவியல் மற்றும் இலக்கிய சங்கம், உடற்பயிற்சிப் பள்ளி, விதவையர் சங்கம் ஆகியவற்றை தொடங்கினார். முதல் இந்திய வர்த்தக அமைப்பை 1859ல் துவங்கினார். 1866ல் கிழக்கிந்திய சங்கத்தை தோற்றுவித்தார்.

இந்திய தேசிய சங்கத்தை சுரேந்திரநாத் பானர்ஜியுடன் சேர்ந்து கல்கத்தாவில் ஆரம்பித்தார். ஆலன் ஆக்டேவியன் ஹியூம், உமேஷ்சந்திர பானர்ஜியுடன் இணைந்து இந்திய தேசிய காங்கிரஸை 1885ல் உருவாக்கினார். இரண்டையும் ஒன்றிணைத்து இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக 3 முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பம்பாய் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றினார். பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினராக (1892 1895) இருந்தார். இந்தியர்களின் துயரத்தை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

காந்தியடிகள், திலகர் போன்ற பெருந்தலைவர்களின் வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். இவரது பொருளாதாரக் கருத்துகள் ஆழமானவை, செறிவு நிறைந்தவை. இந்தியாவின் ஆதார வளங்கள், நிதி ஆதாரங்களை வெள்ளையர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருந்ததை, புள்ளிவிவரத்துடன் எடுத்துக்கூறினார். இந்தியர்களின் தனிநபர் வருமானம் வெறும் 20 ரூபாய்தான் என 1870ல் சுட்டிக்காட்டினார்.

'பாவர்ட்டி அண்ட் அன்பிரிட்டிஷ் ரூல் இன் இண்டியா' என்ற தனது நூலில் பிரிட்டிஷாரின் கொடுங்கோல் ஆட்சி பற்றிய உண்மைகளை அம்பலப்படுத்தினார். பாரதத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள், ராணுவத்தினர், முதலாளிகள், வணிகர்கள் அடங்கிய முதல் பிரிவினர் தங்கள் வருமானம் முழுவதையும் இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்று அங்கு செல்வத்தைக் குவிக்கின்றனர். மற்றொரு பிரிவான ஏழைகள், விவசாயிகள், சுரண்டப்படும் பெரும்பான்மை மக்கள் பெரும் துன்பத்திலும், வறுமையிலும் வாழ்கின்றனர் என்றார்.

காங்கிரஸ் இயக்கம் பெரும் அரசியல் இயக்கமாக வளர்ச்சி அடைந்ததில் இவரது பங்களிப்பு மகத்தானது. சுயராஜ்ஜியக் கொள்கையை முதன்முதலில் பிரகடனம் செய்த தாதாபாய் நவ்ரோஜி, தன் 92வது வயதில் மறைந்தார்.

கேஸ்மா நிரோஷா

# சிறுகோள் தினம்

சிறுகோள் என்பது சூரியக் குடும்பத்தின் உட்புறப் பகுதியில் சூரியனைச் சுற்றிவரும் கோள்களினும் மிகச் சிறியவை. வால் நட்சத்திரம் பண்பேதும் இல்லாத, சூரியக் குடும்ப உருவாக்கத்தின்போது கோள்களுக்குள் சேர்த்துக் கொள்ளப்படாத, எச்சங்களாகிய வான்பொருள்கள். சிறுகோள்களில் பெரியதும், கோளைவிட சிறியனவாக அமையும் வான்பொருள்கள் 'கோள்போலிகள்' எனப்படுகின்றன.

மிகப் பெரும்பான்மையான சிறுகோள்கள், சிறுகோள் பட்டைப் பகுதியிலேயே காணப்படுகின்றன. சிறுகோள் பட்டைகள் செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில் உள்ளன. சில சிறுகோள்களுக்கு, நிலாக்களும் அமைவதுண்டு. சூரியக் குடும்பத்தின் வெளிப்புறப் பகுதியில் உள்ள சிறுகோள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றின் மேற்பரப்புகள் வால் நட்சத்திரங்களைப் போல ஆவியாகும் தன்மையோடு ஒத்திருக்கின்றன. எனவே, இவை சிறுகோள்பட்டையில் உள்ள சிறுகோள்களில் இருந்து பிரித்து உணரப்படுகின்றன.

வியாழனின் அரைப் பேரச்சுகளுக்கு அப்பாலுள்ள, பனிக்கட்டியினாலான சிறியகோள்கள், வால் நட்சத்திரங்கள், செண்டார்கள், நெப்டியூனுக்கு அப்பாலுள்ள பொருள்கள், விண் கற்கள், கோளிடை வெளியிலுள்ள திண்மப் பொருட்கள் ஆகியவை சிறுகோள்களை விடவும் சிறியவை. விண்கற்கள் பொதுவாக பாறை அளவு அல்லது அதனினும் சிறியவை.

1801 ஆம் ஆண்டிற்குப் பிறகு, வானில் பல நுண்ணிய பொருள்கள் செவ்வாய்க்கும் வியாழனுக்கும் நடுவிலுள்ள நீள் வட்டப்பாதைளில், சூரியனைச் சுற்றி வருவதாகக் கண்டுபிடிக்கபட்டது. அவை சூரியனைச் சுற்றுவதால் அவற்றைக் கோளாகத்தான் மதிக்க வேண்டும். ஆனால் அவை மிகமிகச் சிறியவை. அவை விண்மீன்களைப் போலவே புள்ளி புள்ளியாகத் தெரிகின்றன. அதனால் அவற்றுக்கு 'அஸ்டிராய்டு' என பெயர் இடப்பட்டது. ஆனால் சில அறிவியலாளர்கள் கோள்களை ஒத்து இருப்பதால், 'பிளானடாய்டு' என்ற பெயரைப் பயன்படுத்தினர்.

இவை சில வேளைகளில், புவியின் வளிமண்டலத்தில் புகுந்து விடுவதுண்டு. அவை காற்றுடன் உராய்ந்து சூடாகி எரிந்து விடும். அவற்றை 'விண்கொள்ளிகள்' என்கிறார்கள். சில விண்கொள்ளிகள் முழுவதுமாக எரிந்து விடாமல் அவற்றின் ஒரு பகுதி தரையில் வந்து விழுவதுண்டு. அவற்றை விண்தாது என்பர். அது புவியின் வளிமண்டலத்தில் நுழையாமல் விண்வெளியிலேயே இருந்தால் அதை விண்கல் எனக் குறிப்பிடுகிறார்கள்.

ப. மகிரிஷன்

விஜயபாரதம்



# வலையில் சிக்கிய மீம்கள் . . .

